கூடுதல் சார்பு நீதிமன்றம்,
கும்பகோணம்.

MCOP.No. 240/ 2019 நாள்– 20.11.2025 சாட்சி– ம.சா.1

( Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act,1969 (Act 44 of 1969)

சாட்சியின் பெயர் – சுகன்யா
சாட்சி ஆஜர். பிரமாணம் செய்யப்பட்டார்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தொடர்பாக கும்பகோணம் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்குகளில் MCOP. 209/2019 என்ற வழக்கு யார் தாக்கல் செய்தது என்றால் என் அம்மா தாக்கல் செய்துள்ளார். மற்றொரு வழக்கான MCOP. 239/2019 என்ற வழக்கு யார் தாக்கல் செய்தது என்றால் நானும், என் அம்மாவும் தாக்கல் செய்துள்ளோம். என் தாயார் தாராசுரத்தில் வசித்து வருகிறார். மேற்படி இரண்டு வழக்குகளிலும் நான் சாட்சியம் அளித்துள்ளேன். மசாஆ– 1 முதல் தகவல் அறிக்கையில் உள்ள விபரங்கள் தொடர்பாக நான் தான் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார் நான் கொடுக்கவில்லை. மசாஆ–1 ஆவணத்தின் அடிப்படையில் தான் நான் இந்த வழக்கிலும் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் உள்ள இரண்டு வழக்கிலும் நாங்கள் இழப்பீடு கோரியுள்ளோம் என்றால் சரிதான்.

மசாஆ–2 சட்டபிரிவு மாறுதல் அறிக்கை எனது சகோதரர் பாலாஜி இறந்து போனதால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் நான் B.Ed., படித்துக்கொண்டு இருந்தேன் என்றால் சரிதான். விபத்து சம்மந்தமான மாதிரி வரைபடம் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை பகுதியாக ஒத்திவைக்கப்படுகிறது)

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by his/her to be Correct.*

*S/d. (C. Sivakumar)*
*Additional Subordinate Judge,*
*Kumbakonam .*